www.Padasalai.Net

அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி போச்சம்பள்ளி

12-ஆம் வகுப்பு உயிரியல் - தாவரவியல் 1 மதிப்பெண் வினா விடைகள்

- எம். சண்முகசுந்தரம் எம்.எஸ்ஸி.,எம்..்.பில்., எம்.எட்., **மு.க.ஆ (தாவரவியல்)**

ஆஞ்சியோஸ்பெர்ம்களின் வகைப்பாட்டியல்:

1. அகில உலக ஐந்தாவது தாவரவியல் கூட்டம் நடைபெற்ற இடம் ----------**(கேம்பிரிட்ஜ்)**
2. தெஸ்பிசியா பாப்புல்னியா ஒரு ----------(மரம்)
3. மால்வேஸி குடும்பத்தை சேர்ந்த ஒரு மரக்கட்டைத் தாவரம் ----------**(தெஸ்பிசியா பாபுல்னியா)**
4. புற்றுநோயைக் குணப்படுத்தும் பண்புகளையுடையத் தாவரம்----- ***(வின்கா ரோஸியா)***
5. பெந்தம் மற்றும் ஹீக்கர் தாவர வகைபாட்டில் முதன் முதலில் இடம்பெற்றுள்ள துறை ----------**(ரானேல்ஸ்)**
6. இயற்கை முறை வகைப்பாட்டினை வெளியிட்டவர்கள் --------**(பெந்தம் மற்றும் ஹீக்கர்)**
7. பெந்தம் மற்றும் ஹீக்கரின் வகைப்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ள தாவரங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை ----------**(97,205 தாவரங்கள் 202 குடும்பங்கள்)**
8. செயற்கை வகைப்பாட்டு முறையை செயல்படுத்தியவர் ----------**(ஸ்வீடன் தாவரசியலார்)**
9. சிற்றினங்களின் தோற்றம்" இவ்வகைபாடு தோன்ற ஒரு தூண்டுதலாக இருந்தது----**(மரபு வழி வகைப்பாடு)**
10. ஸ்பீஸிஸ் பிளாண்டாரம் என்ற நூலை எழுதியவர் ----------**(கரோலஸ் லின்னேயஸ்)**
11. --------ல் சூல்கள் திறந்த நிலையில் காணப்படும் **(ஜிம்னோஸ்பெர்ம்)**
12. பாலின உறுப்புகள் அமைந்திருக்கும் விதத்தால் தன்மகரந்தச்சேர்க்கைத்தடைபடுகிற தகவமைப்பிற்கு ----------(**பாலுறுப்புத்தடை**)
13. மரபுவழி வகைப்பாட்டை உருவாக்கிய முன்னோடிகள் ----**(அடால்ப் எங்லர், பிராண்டல்)**
14. உயிர் வாழும் ஆஞ்சியோஸ்பெர்களில் மிகவும் தொன்மையானது ----------துறையில் உள்ளது. **(ரானேல்ஸ்)**
15. "அக்காலிபா இண்டிகா" தாவரத்தின் மஞ்சரி ----------(**கேட்கின்**)
16. **மால்வேஸி குடும்பத்தில் ----------தாவரத்தில் புறப்புல்லிவட்டம் இல்லை (அபுட்டிலான் இன்டிகம்)**
17. *காசிப்பியம் பார்படென்ஸ்* தாவரத்தின் நார்கள் ----------லிருந்து பெறப்படுகிறது **(தண்டு)**
18. *காசிப்பியம் ஹரிசூட்டம்* ---------குடும்பத்தை சார்ந்தது **(மால்வேஸி)**
19. மியூஸேஸி இடம் பெற்றுள்ள வரிசை ----------**(எபிகைனே)**
20. ஏபெல்மாஸ்கஸ் எஸ்குண்டம் தாவரத்தின் கனி ----------**(சூலகஅறை வெடிகனி)**
21. சொலானேஸி இடம்பெற்றுள்ள துறை --------**(பாலிமோனியேல்ஸ்)**
22. *சொலானம்* செடியின் சாறு ----------நோயிக்கு நல்ல பலனை கொடுக்கும் **(கல்லீரல் சிரோசிஸ்)**
23. பைரிகுலேரியா ஒரைசே உருவாக்கும் நோய் ----------**(நெல்லில் வெப்பு நோய் (அ) பிளாஸ்ட் நோய்)**
24. அராக்கிஸ் ஹைப்பொஜியாவின் சாதாரணப்பெயர் ----------**(நிலக்கடலை)**
25. *சொலானம் டிரைலோபேட்டம்* எனப்படுவது ----------**(தூதுவலை)**

26. *வெர்னோரியா ஆர்போரியா* ஒரு ----------**(மரம்)**
27. *ரெஸினஸ் கம்யூனியஸ்* தாவரத்தில் காணப்படும் மகரந்தங்கள் --------**(பலகற்றை)**
28. இனப்பெருக்க வகைப்பாடு என அழைக்கப்படுவது------**(செயற்கை வகைப்பாடு)**
29. பரிசோதனை வகைப்பாட்டியல் என்ற சொற்களை கொண்டு வந்தவர்கள் **(கேம்ப் மற்றும் கில்லி)**
30. இங்கிலாந்து, கியூவில் உள்ள அரசு தாவரவியல் தோட்ட ஹெர்பேரியத்தில் யாருடைய வகைபாடு பின்பற்றப்படுகிறது **(பெந்தம் மற்றும் ஹூக்கர்)**
31. ஹெலிகாய்டு சைமோஸ் வகை மஞ்சரி காணப்படும் தாவரம் ------***(சொலானம் டியுபரோசம்)***
32. இருசொற்பெயரிட முறையை 1623 –ல் அறிமுகப்படுத்தியவர் ----------**(காஸ்பர்டு பாஹின்)**
33. தவறான மூலத்திலிருந்து ஒரு தாவரம் பெயர் சூட்டப்பட்டிருந்தால் அது---------**(நாமென் ஆம்பிகுலம்)**
34. யூனிசெக்சுவேல்ஸ் என்ற வரிசையில் உள்ள குடும்பம் ----------**(யூ.∴போர்பியேஸி)**
35. *பொராசஸ் ∴பிலாபெல்லி.∴பெர்* என்பதன் சாதாரண பெயர் ------**(பனை)**
36. ரெப்பிநெட் ஹெர்பேரியம் காணப்படும் இடம்----------**(திருச்சி)**

எம். சண்முகசுந்தரம் எம்.எஸ்ஸி.,எம்.∴பில்., எம்.எட்., மு.க.ஆ (தாவரவியல்)9443510886

37. *அலோ டைகாட்டமா*வின் மஞ்சரி ----------**(ஸ்பைக்)**
38. *அகாலிபா இண்டிகா* தாவரத்தில் காணப்படும் மஞ்சரி வகை----------**(காட்கின்)**
39. மியூசிலேஜ் திரவத்தையுடைய தாவரங்கள் அடங்கிய குடும்பம் --------(**மால்வேஸி**)
40. யூ.∴போர்பியேஸி குடும்பத் தாவரத் தண்டுகள் அனைத்தும் ----------பெற்றுள்ளது **(லேட்டெக்ஸ்)**
41. யூ.∴போர்பியேஸி குடும்பத்தில் *∴பில்லாந்தஸ் நிரூரி* தாவரத்தில் காணப்படும் மலர்கள் ---------- **(தனிமலர்)**
42. யூ.∴போர்பியேஸி குடும்பத்தில் வைட்டமின் C காணப்படும் கனியை கொண்ட தாவரம் -------- (**நெல்லி (*பில்லாந்தஸ் எம்பிளிக்கா)***
43. கரோலஸ் லின்னேயஸ் என்பவர் ----------**(ஸ்வீடன் தாவரவியலார்)**
44. பெர்ரி வகை கனியை கொண்ட சொலானேஸி குடும்பத்தாவரம்------**(லைக்கோ பெர்சிகான்)**
45. இணையாக தனித்த அல்லிகளை உடைய தாவரங்கள் ----------**(பாலிபெட்டலே)**
46. மஞ்கட்காமாலையை குணப்படுத்தப் பயன்படும் தாவரம் ----------(**∴பில்லாந்தஸ் அமராஸ்)**
47. *ஏபெல்மாஸ்கஸ் எஸ்குலண்டஸ்* தாவரத்தின் கனிவகை-------**(அறை வெடிகனி)**
48. குயினோன் பெறப்படும் தாவரம் ----------**(சிங்கோனா அ.∴பிசினாலிஸ்)**
49. மீன்பிடிக்கும் வலைகள் ---------- தாவரத்தின் நார்களில் இருந்து பெறப்படுகிறது **(∴போர்மியம் டினக்ஸ்)**
50. கிளாடோடுக்கு ஓர் எடுத்துக்காட்டு **(யூ.∴போர்பியா டிருக்கள்ளி)**
51. கரோலஸ் லின்னேயஸ் வகைப்பாட்டில் உள்ள வகுப்புகளின் எண்ணிக்கை --------(24)
52. தொழுநோய் மற்றும் பாம்புகடியை குணப்படுத்தும் யூ.∴போர்பியேஸி குடும்பத்தாவரம் --------- **(ஜாட்ரோ.∴பா காஸிப்பி.∴போலியா)**
53. பில்லாந்தஸ் அமாரஸ் தாவரத்தின் வேர்தொகுப்பு -------நோயினை குணப்படுத்த உதவுகிறது **(பாம்பு கடி)**
54. உயிரி டீசல்எண்ணெய் தயாரிக்க பயன்படும் தாவரம் --------**(ஜட்ரோபா குர்காஸ்)**

55. சூலக கீழ்மலர் மற்றும் கீழ்மட்டசூற்பையை கொண்ட தாவரங்கள் சார்ந்துள்ள டாக்ஸான் ----- **(இன்.ீபெரே)**

56. கீழ்மட்ட சூற்பை ஒரு விதையுடன் உலர்வெடிகனியாக வளர்ச்சியடைகிறது. இக்கனி-------- **(சிப்செல்லா)**

57. சூலக மேல்மலர் மற்றும் இரண்டு சூல் இழைகளையுடைய மலர்களை கொண்ட தாவரங்கள் சார்ந்துள்ள டாக்ஸான் -----**(பை கார்பலேட்டே)**

58. ஓரறையுடைய மகரந்தப்பை காணப்படும் குடும்பம் ---------**(மால்வேஸி)**

தாவர உள்ளமைப்பியல்:

1. மக்கா சோளத்தில் ஹைப்போடெர்மிஸ் எந்த செல்களினால் ஆனது-------**(ஸ்கிளிரன்கைமா)**
2. அகத்தோலில் வழிச்செல்கள் காணப்படுவது---------**(இருவித்திலைத் தாவர வேர்)**
3. துணைசெல்கள் காணப்படும் தாவரப்பிரிவு ----------**(ஆஞ்சியோஸ்பெர்ம்கள்)**
4. ∴புளோயம் சூழ்வாஸ்குலார் கற்றை ----------தாவரத்தில் காணப்படுகிறது **(பாலிபோடியம்)**
5. சைலம் சூழ்வாஸ்குலார் கற்றை (Amphivasal) ----------ல் காணப்படுகிறது **(அக்கோரஸ்)**
6. சைலமும் ∴புளோயமும் ஒரே ஆரத்தில் அமைந்திருப்பது ----------**(ஒருங்கமைந்தது)**
7. ∴புளோயம் பாரன்கைமா ----------தாவரங்களில் காணப்படுவதில்லை **(ஒருவித்திலைத்)**
8. ----------தாவரக்குழுக்களில் புளோயம் பாரன்கைமா இல்லை **(ஒருவித்திலைத்)**
9. இருவித்திலை தாவரத் தண்டின் ஹைப்பொடெர்மிஸ் ----------செல்களால் ஆனது**(கோளன்கைமா)**
10. புரோகேம்பியத்டதிலிருந்து தோன்றும் அமைப்பு ----------**(முதலாம் வாஸ்குலார் தொகுப்பு)**
11. வாஸ்குலார் கேம்பியம் எனப்படுவது -----**(பக்கஆக்குதிசு)**
12. வாஸ்குலார் கற்றையில் உள்ள கேம்பியம் ----------**(கற்றை கேம்பியம்)**
13. விரவிக் காணப்படும் வாஸ்குலார் கற்றை ----சிறப்பம்சம்**(ஒருவித்திலை தாவரத் தண்டு)**
14. எண்டோடெர்மிஸில் காணப்படும் வழிசெல்களை பெற்றுள்ள தாவர அமைப்பு ---------- **(இருவித்திலை தாவர வேர்)**
15. டெரிடோபைட்டுகளிலும் ஜிம்னோஸ்பெர்ம்களிலும் காணப்படாத செல் ----------**(துணைசெல்)**
16. சைல திசுவிலுள்ள செல்வகைகளுள் உயிருள்ள செல்கள் ------**(ஸைலம் பாரன்கைமா)**
17. பல்முனை சைலம் (Polyarch xylem) ----------ல் காணப்படுகிறது **(ஒருவித்திலை தாவர வேர்)**

எம். சண்முகசுந்தரம் எம்.எஸ்ஸி.,எம்..ீபில்., எம்.எட.ீ, மு.க.ஆ (தாவரவியல்) 9443510886

18. கார்க் கேம்பியம் ஒரு ---------**(பக்க ஆக்குதிசு)**
19. ---------- கல் செல் என அழைக்கப்படுகிறது **(பிரேக்கி ஸ்கிளிரைடு)**
20. காப்பு செல்கள் ------ல் உள்ளன. **(இலையின் புறத்தோல்)**
21. பக்கவேர்கள் ----------லிருந்து தோன்றுகிறது **(பெரிசைக்கிள்)**
22. காஸ்பேரியன் பட்டைகள் ----------அகத்தோலில் காணப்படுகிறது **(வேரின்)**
23. பாரன்கைமாவில் செல்சுவர் ---------ஆல் ஆனது **(செல்லுலோஸ்)**
24. --------தாவரத்தின் விதையுறையில் மாக்ரோஸ்கிளீரைடுகள் உள்ளன **(குரோத்தலாரியா)**

25. ஒருங்கமைந்த மற்றும் மூடிய வாஸ்குலார் கற்றைகளை உடைய தாவரப் பகுதி ----------**(சூரிய காந்தி இலை)**
26. சைலக்குழாய்களின் வழிகளை அடைக்கும் பலூன் போன்ற நீட்சிகள் ----------**(∴பெல்லோஜன்)**
27. இருவித்திலைத் தாவரத்தண்டில் காணப்படும் வாஸ்குலார்கற்றைகள் ----------**(ஒருங்கமைந்தவை, உள்நோக்கிய சைலம் கொண்டவை, திறந்தவை)**
28. இலையில் காணப்படுகின்ற வாஸ்குலார் கற்றைகள் ------ **(கன்ஜாயிண்ட்,ஒருங்கமைந்தவை,மூடியவை)**
29. ஆக்கதிசு நிலைத்த திசுவாக மாறும் நிகழ்ச்சி -------**(வேறுபாடு அடைதல்)**
30. இடைவெளிக் கோலன்கைமா -------ல் காணப்படுகிறது **(ஹைப்போமியர்)**
31. அடுக்குக் கோலன்கைமாவால் (Lamellar collenchyma) ஆன ஹைப்போடெர்மிஸ் பகுதியை உடைய தாவரம் --------**(ஹீலியாந்தஸ்)**
32. லிக்னின் என்ற பொருளால் ஆன இரண்டாம் செல்சுவரை கொண்டது--------**(ஸ்கிளிரன்கைமா)**
33. புறணியின் கடைசி அடுக்கு ----------**(அகத்தோல்)**
34. தாவரத்தின் அனைத்து உறுப்புகளிலும் காணப்படும் திசு ---**(பாரன்கைமா)**
35. வேர்தூவிகள் ---------லிருந்து தோன்றுகிறது **(டிரைகோ பிளாஸ்டுகள்)**
36. வேரின் புறணி ----------செல்களாலானது **(பாரங்கைமா)**
37. புரோட்டோ சைல இடைவெளி காணப்படும் வாஸ்குலார் கற்றை கொண்ட தாவர பகுதி---------- **(ஒருவித்திலைத தாவர தண்டு)**
38. கல்வாழையின் இலைக்காம்பில் உள்ள பாரன்கைமா -------**(நட்சத்திர வடிவ பாரன்கைமா)**
39. நட்சத்திர வடிவில் காணப்படும் பாரன்கைமா ----------**(ஸ்டெல்லேட் பாரன்கைமா)**
40. ஸ்டெல்லேட் பாரன்கைமா ----------ல் காணப்படுகிறது **(கல்வாழையின் இலைக்காம்பு)**

செல்லியல் மற்றும் மரபியல்:

1. *சூடோமோனாஸ் பூடிடா”* என்ற மரபுப்பொருளை இடம்மாற்றி உருவாக்கப்பட்ட பாக்டீரியம் ---------**(அசகாய பூச்சி சுப்பர்பக்)**
2. மரபுப்பொருளை இடம்மாற்றி உருவாக்கப்பட்ட பாக்டீரியம் *சூடோமோனாஸ் பூடிடா”* ---------- சிதைக்கிறது **(கச்சா எண்ணெய்)**
3. பாரம்பரியத்தின் அலகு ---------**(ஜீன்)**
4. ஜீன் என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் ----------**(ஜோஹான்சன்)**
5. மரபு வரைபடத்தின் அலகு ----------**(மார்கன்)**
6. கொல்லி திடீர்மாற்றம் காணப்படுவது--------**(சோளம்)**
7. DNA –வின் இரண்டு நியூக்ளியோடைடுகளுக்கிடையே உள்ள தூரம்-------(3.4 **A)**
8. DNA –மூலக்கூறின் விட்டம்----------(20 **A**)
9. DNA –வின் இரட்டை சுருள் மாதிரியை விளக்கியவர் ----------**(வாட்சன் மற்றும் கிரிக்)**
10. DNA –விலிருந்து ஜீன் செய்திகளை mRNA–--------ற்கு எடுத்துச்செல்கிறது **(ரைபோசோம்)**

11. ---------மரபு செய்திகளை DNA –விலிருந்து ரைபோசோம்களுக்கு எடுத்துச்செல்கிறது **(mRNA)**

12. tRNA வில் உள்ள ரைபோநியூக்ளியோடைடுகளின் எண்ணிக்கை ---------(73 – 93)

எம். சண்முகசுந்தரம் எம்.எஸ்ஸி.,எம்..்.பில்., எம்.எட்., மு.க.ஆ (தாவரவியல்) 9443510886

13. மனிதனால் உருவாக்கப்பட்ட டிரைட்டிகேல் என்னும் தாவரத்தின் தன்மை ---------- **(ஹெக்ஸாப்ளாய்டு)**

14. ஒரு நியுக்ளியோடைடு எனப்படுவது ---வுடன் இணைந்துள்ளது **(5 மூலக்கூறு சர்க்கரை, நைட்ரஜன் காரப்பொருள், பாஸ்பாரிக் அமிலம்)**

15. அராபிடியாப்சிஸ் தாலியானா உயிரினத்தின் ஜீனோமில் காணப்படும் ஜீன்களின் எண்ணிக்கை ----------(26,000)

16. விலகல் சோதனைக் கலப்பு விகிதம் ----------**(1:7:7:1)**

17. மனித மைட்டோகாண்டிரியா ஜீனோமில் உள்ள ஜீன்கள் மற்றும் கார இணைகள் ----------(37 **ஜீன்கள் 16,569 காரஇணைகள்)**

18. குன்றல் பிரிவின்போது புரோபேஸ் I- ல் குறுக்கெற்றம் நடைபெறும் நிலை ----------**(பாக்கைடீன்)**

19. அதிக நிலைப்புத்தன்மை உடைய RNA ------**(ரைபோசோம் RNA)**

20. செல்லில் உள்ள RNA-வில் m-RNA ன் அளவு ----------**(3 - 5%)**

21. குரோமோசோம் என்ற பெயரை அறிமுகப்படுத்தியவர் ----------**(வால்டேயர்)**

22. குரோமோசோமின் நுனிப்பகுதியின் நிலைப்புத்தன்மைக்கு உதவுவது------**(டீலோமியர்)**

23. ஹோமோசேப்பியன்ஸின் ஜீனோம் ---------(23)

24. நண்ணுயிர் எதிர்ப்பு மற்றும் உடல் அமைப்ப புரதங்களை கட்டுவதில் ஈடுபடும் மனித ஜீனோமின் அளவு ----------**(38.2%)**

25. நீக்கல் ஜீன் திடீர்மாற்றம் -------உயிரினத்தில் கண்டறியப்பட்டது **(பாக்டீரியோபேஜ்)**

26. சிம்பன்சி குரங்கின் 17-வது குரோமோசோம் ----------**(மெட்டாசென்ட்ரிக்)**

27. குரோமோசோம்களின் மீள்சேர்க்கை குன்றல் செல் பிரிதலின் போது -------நிலையில் நடைபெறுகிறது **(புரோபேஸ் I பாக்கிடீன்)**

28. ஜீன்கள் குரோமோசோம்களில் தான் உள்ளது என உறுதி செய்தவர் --------**(பிரிட்ஜஸ் 1916)**

29. ---------ல் டபுள் மினிடஸ் குரோமோசோம் உள்ளது **(புற்றுநோய் செல்கள்)**

30. ----------எந்த தாவரத்தில் ஹியூகோ டீ வ்ரிஸ் திடீர் மாற்றத்தைக் கண்டறிந்தார் ***(ஈனோதீரா லாமார்க்கியானா)***

31. சிஸ்ட்ரான் உன்பது ---------- அலகாகும் **(செயல்பாடு)**

32. பாஸ்டா எனப்படும் களைக்கொல்லியை செயலிழக்கச் செய்யும் ஜீன்களை உடைய உயிரி ---------***(எஸ்ட்ரெப்டோமைஸஸ் ஹைக்ரோஸ்கோபிகஸ்)***

33. இரு பிணைந்த ஜீன்களுக்கிடையில் உள்ள குறுக்கே கலத்தல் வீதம் 1% என்றால் அதன் இரு ஜீன்களுக்கும் அடையில் உள்ள வரைபட இடைவெளி ------**(1 மார்கன்)**

34. மானோசோமி -------என்று குறிப்பிடப்படுகிறது **(2n-1)**

35. நல்லிசோமி -------என்று குறிப்பிடப்படுகிறது **(2n-2)**

36. உயிர்வேதி திடீர்மாற்றம் -------ல் கண்டுபிடிக்கப்பட்டது **(நியுரோஸ்போரா)**

37. சைலம் சூழ்வாஸ்க்குலார் கற்றை (Amphivasal) ----------ல் காணப்படுகிறது **(அக்கோரஸ்)**

38. குரோமோசோம் புடைப்பு காணப்படும் குரோமோசோம் வகை ---------**(பாலிடீன் குரோமோசோம்)**

39. ஆட்டோடெட்ராபிளாய்டிக்கு உ.ம் ----------**(ஆப்பிள், தற்பூசணி, வாழை)**

40. குரோமோசோம்களில் மீள்சேர்க்கை நிகழும் நிலை----------**(குன்றல்பிரிசின் புரோபேஸ் I)**

41. பாலிடீன் குரோமோசோம்களை முதன் முதலில் கண்டறிந்தவர் --------**(பால்பியானி)**

42. 'சுப்பர் நியுமரி' என அழைக்கபடும் குரோமோசோம் ----------**('B'- குரோமோசோம்)**

43. விளக்கு தூரிகை குரோமோசோம்களை முதன் முதலில் கண்டறிந்தவர் --------**(பிளம்மிங்)**

44. விளக்கு தூரிகை குரோமோசோம் காணப்படும் உயிரினம் ----------(**அசிடாபுலேரியா, சலமாண்டர்)**

45. நைட்ரஜன் கார இணைவிதிகளை வெளியிட்டவர் ----------(**சார்காப்**)

உயிர்தொழில்நுட்பவியல்:

1. *அக்ரோபாக்டீரியம் டியூமி.:பேசியன்ஸ்* தோற்றுவிக்கும் நோய் ----------**(மகுட கழலை)**

2. புற்றுநோய் போன்ற கட்டியை தூண்டும் பாக்டீரியம்---------- **(*அக்ரோபாக்டீரியம் டியூமி.:பேசியன்ஸ்)***

3. டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள இடம்-------**(சென்னை)**

4. இரண்டு புரோட்டோபிளாஸ்டுகளுக்கிடையே இணைவை உண்டாக்கும் இணைவு காரணி-------- **(பாலிஎத்திலீன்கிளைகால்)**

5. மறுசேர்க்கை DNA வின் மூலமாக தயாரிக்கப்பட்ட வைரஸ் எதிர்ப்பு பொருள் --------**(இண்டர்பெரான்)**

6. வளர்ப்பு ஊடகத்தில் உள்ள நுண்ணுயிரிகளை நீக்கப் பயன்படும் முறை ----------**(நுண்ணுயிர்நீக்கம்)**

7. திசு வளர்ப்பின்போது கேளஸிலிருந்து வேர்கள் தோன்றும் நிகழ்வு ----------**(ரைசோஜெனிசிஸ்)**

8. திசு வளர்ப்பு முறையின் மூலம் ------பெறப்படுகிறது **(செயற்கை விதைகள்)**

9. உயிருள்ள தாவர செல்லிலிருந்து முழு தாவரத்தை உருவாக்கும் திறன் ----------**(முழுத்திறன் பெற்றுள்ளமை)**

10. ---------மூலமாக உடலக்கலப்பினங்கள் உருவாக்கப்படுகின்றன **(புரோட்டோபிளாச இணைவுகள்)**

11. செல்லின் செல் சுவரை கரைக்க உதவும் நொதி ----------**(செல்லுலேஸ்)**

12. புரோட்டோபிளாச இணைவு முறையை பயன்படுத்தி -----தாவரத்தில் உடலச்சிற்றினக் கலப்பினங்கள் உண்டாக்கப்படுகிறது **(காரட்)**

13. DNA துண்டுகளை இணைக்கும் நொதி ----------**(DNA லைகேஸ்)**

14. ஒவ்வொரு ரெஸ்ட்ரிக்ஷன் நொதியும் DNA மூலக்கூறை ----------இடத்தில் துண்டிக்கிறது **(நியூகளியோடைடு வரிசையில்)**

15. மனித உடலில் கொழுப்பு தேங்குவதைத் தடைசெய்வது ----------(**SCP தனிசெல் புரதம்**)-

16. பாக்டீரிய தனிசெல் புரத உயரி----------**(சூடோமோனாஸ் (அ) அல்கலிஜீன்ஸ்)**

17. தனிசெல் புரதம் என்ற வார்த்தை ----------ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது **(1966)**

18. -------- தனிசெல் புரதம் **(சூடோமோனாஸ்)**

19. தனிசெல் புரதத்தில் காணப்படும் புரதத்தின் அளவு ----------**(60 -72%)**

20. ரெஸ்ட்ரிக்ஷன் நொதி ----ஆல் உற்பத்தி செய்யப்படுகிறது **(பாக்டீரியங்கள்)**

21. அயல்ஜீனை புகுத்துவதற்க முதன்மையாக பயன்படும் பாக்டீரியம் -----**(அக்ரோபாக்டீரியம்)**

22. அயல்ஜீனை செல்லினுள் அறிமுகப்படுத்த பயன்படுத்தப்படும் முறை ---------**(மின்துளையாக்கம்)**

23. அயல்ஜீன்களை பெற்ற ஒருவித்திலை தாவரம்----------**(அஸ்பராகஸ் சிற்றினம்)**

24. அயல்ஜீன்களை பெற்ற இருவித்திலை தாவரம்----------***(பீட்டா வல்காரிஸ்)***

தாவர செயலியல்:

1. PS –I லிருந்து வெளியேறிய எலக்ட்ரான்களை கடத்தும் பொருள் -----**(∴பெரடாக்ஸின்)**
2. பென்டோஸ் பாஸ்பேட் வழித்தடம் நடைபெறுமிடம் ----------**(சைட்டோபிளாசம்)**
3. C4 வழிதடத்தில் தாவர கற்றை உறைசெல்லில் CO2 -வை ஏற்கும் மூலக்கூறு --------**(RUBP)**
4. C3 வழிதடத்தில் (கால்வின் சுழற்சி) CO2 –ஐ ஏற்றுக்கொள்ளும் ஏற்பி ----------**(RUBP)**
5. C3 தாவரத்திற்கு எடுத்துக்காட்டு----------**(நெல்)**
6. C3 வழிதடத்தில் முதலில் உருவாகும் நிலையான சேர்மம்--------**(பாஸ்போகிளிசரிக் அமிலம்)**
7. C4 சுழற்சியில் ஆக்ஸாலோ அசிட்டிக் அமிலத்தை அஸ்பார்டிக் அமிலமாக மாற்ற உதவும் நொதி ----------**(டிரான்ஸ் அமினேஸ்)**
8. C4 தாவரத்திற்கு எடுத்துக்காட்டு----------**(அமராந்தஸ்)**
9. மக்காசோளத்தில் காணப்படும் சைட்டோகைனின் ------- என்று அழைக்கப்படுகிறது **(சியாடின்)**
10. பகுதி ஒட்டுண்ணிக்கு எடுத்துக்காட்டு --------**(விஸ்கம்)**
11. தாவர ஹார்மோன்களில் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது -------**–(ஆக்ஸின்)**
12. வேர்கள் தரைநோக்கி வளர்வதை ஊக்குவிக்கும் ஹார்மோன்----------**(எத்திலீன்)**
13. இலைத்துளை மூடுவதைத் துண்டுவது ----------**(அப்சிசிக் அமிலம் (ABA)**
14. ஆல்டோலேஸ் செயல்படும் தளபொருள் --------**(ப்ரக்டோஸ் 1,6 –பிஸ்பாஸ்பேட்)**
15. பொதுவாக பசுங்கணிகங்களில் காணப்படும் கிரானாக்களின் எண்ணிக்கை----**(40 – 60)**
16. கிளைகாலிசிஸ் ----------ல் நடைபெறுகிறது**(சைட்டோபிளாசம்)**
17. கிளைகாலிசிஸின்இறுதி பொருள் --------**(பைருவிக் அமிலம்)**
18. ஆக்ஸாலோ அசிட்டேட்டும் அமிலமும் அசிட்டைல் CO-A ம் சேர்ந்து உருவாகும் அமிலம் ---- **(ஐசோ சிட்ரிக் அமிலம்)**
19. ஆக்ஸாலோ அசிட்டிக் அமிலம் ஒரு ----------**(4 கார்பன் கூட்டுப் பொருள்)**
20. நெற்பயிரில் "கோமாளித்தன நோயை உருவாக்குவது ----------**(ஜிப்ரல்லா ∴பியூஜிகுராய்)**
21. ∴பியூமாரிக் அமிலம் மாலிக் அமிலமாக மாற உதவும் நொதி ----------**(பியூமரேஸ்)**
22. மாலிக் அமிலத்தின் சுவாச ஈவு --------**(1. 33)**
23. சுழற்சி எலக்ட்ரான் கடத்தப்படும் நிகழ்ச்சியில் ----------உருவாகிறது(**ATP** மட்டும்)
24. உயர்தாவரங்களின் ஒளிச்சேர்க்கைக்கு புரோட்டான் மற்றும் எலக்ட்ரான்களுக்கு ஆதாரமாக செயல்படுவது --------**(SO_2)**

25. ஒளிசுவாசத்தின்போது இரண்டு கிளைசின் மூலக்கூறுகள் இணைந்து சீரைன் உருவாகும் நிகழ்வு நடைபெறும் நுண்ணுறுப்பு --------**(மைட்டோகாண்டீரியா)**
26. ஒளிச்சேர்க்கையின் ஒளிகிரியை குளோரோபிளாஸ்டின் --------பகுதியில் நடைபெறுகிறது **(கிராணா)**
27. எந்த நிகழ்வின்போது நீர் ஒளிப்பிளத்தல் நடைபெறுகிறது- ----------**(சுழற்சியில்லா ஒளி பாஸ்பரிகரணம்)**
28. குளுக்கோஸை பாஸ்பரிகரணம் அடையச்செய்து குளுக்கோஸ் -6-பாஸ்பேட்டாக மாற்றம் அடையச்செய்யும் நொதி -------**(ஹெக்ஸோகைனேஸ்)**
29. ஒளிச்சேர்க்கையை மிகத்திறம்பட தூண்டும் ஒளி அலை ---------**(400nm to 700nm)**
30. ஹேட்ச் மற்றும் ஸ்லாக் வழித்தடத்தில் கற்றை உறை செல்களில் நுழையும் 4 கார்பன் கூட்டுப்பொருள் ----------**(மாலிக் அமிலம்)**
31. இருட்சுவாசம் -------ல் நடைபெறுகிறது **(மைட்டோகாண்டீரியா)**
32. இருள்வினையின் மற்றொரு பெயர் ----------**(கால்வின்சுழற்சி)**
33. ரிச்மாண்ட் லாங்க் விளைவினால் தாவரங்களில் --------தாமதபடுத்தப்படுகிறது **(முதுமையடைதல்)**
34. குளுக்கோஸின் காற்றில்லா சூழலில் சுவாச ஈவு ----------**(முடிவற்ற நிலை)**
35. குளுக்கோஸின் சுவாச ஈவு ----------**(1)**
36. முழுமையாக ஆக்ஸிஜனேற்றமடையும் ஒரு மூலக்கூறு குளுக்கோஸிலிருந்து கிடைப்பது **---- (38 ATP or 2900kj)**
37. காற்றுள்ள சுவாசத்தில் பைருவிக் அமிலம் ஆக்ஜிகரணமடைந்து அசிட்டைல் CoA வாக ---------மாற்றப்படுகிறது **(மைட்டோகாண்டிரியா)**
38. பொதுவான சுவாச தளப்பொருள் --------**(கார்போஹைட்ரேட்டுகள்)**
39. காற்று சுவாசத்தின் முதல் நிலை ----------**(கிளைகாலிசிஸ்)**
40. சுவாசித்தலின் முடிவில் CO_2 வெளியேறுகிறது என்பதை விளக்கும் கருவி -----**(கேனாங்கின் சுவாசமானி)**
41. நெப்பந்தஸ் என்னும் பூச்சியுண்ணும் தாவரம் ----------ஊட்டச்சத்து குறைவாக உள்ள மண்ணில் வளர்கிறது. **(நைட்ரஜன்)**
42. ஒட்டுண்ணித் தாவரங்கள் ஓம்பூயிரிலிருந்து புளோயத்திலிருந்து உணவை உறிஞ்ச உதவும் அமைப்பு--------**(ஹாஸ்டோரியா)**
43. பச்சையம் உற்பத்திக்குத் தேவையான முக்கிய தனிமம் --------**(Mg)**
44. ஒளிச்சேர்க்கையின்போது வெளிப்படும் வாயு ----------**(ஆக்ஸிஜன்)**
45. முதன்மை நிறமி எனப்படுவது **(பச்சையம் a)**
46. சூரிய ஒளி ஆற்றலை மிகவும் திறம்பட ஈர்க்கவல்ல நிறமி ----------**(பச்சையம்)**
47. 'முனை ஆதிக்கம்' (Apical dominance)என்பது ----------ஆல் ஏற்படுகிறது **(ஆக்ஸின்)**
48. செல்லின் ஆற்றல் நாணயம்----------**(ATP)**
49. பூச்சியுண்ணும் தாவரத்திற்கு உ.ம்.---------**(டிராஸிரா)**
50. வெர்னலைசேஷன் என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியவர் ----------**(T.D லைசென்கோ)**
51. குறும்பகல் தாவரத்திற்கு எ.கா ----------**(புகையிலை, கிரைசாந்திமம்)**

52. நீள்பகல் தாவரத்திற்கு எ.கா ----------**(கோதுமை, ஓட்ஸ்)**

53. நாள் நடுநிலைத் தாவரம் ----------**(சூரியகாந்தி மக்காசோளம்)**

54. சூரிய பனித்துளி தாவரம் ----------என்றழைக்கப்படுகிறது **(டிராஸீரா)**

55. இலைத்துளைகளை மூடச்செய்வது ----------**(அப்சிசிக் அமிலம்)**

56. சைட்டோகைனின் -------க்கு பயன்படுகிறது **(செல் பிரிவு)**

57. ----------செயற்கை ஆக்ஸின் **(நாப்தலின் அசிட்டிக் அமிலம் (NAA)**

58. ஹெர்ரிங் மீனிலிருந்து சைட்டோகைனினை பிரித்தெடுத்தவர் --------**(மில்லர் மற்றும் கூட்ஜ்)**

59. ----------நிகழ்வில் தளபொருள் பாஸ்பரிகரணம் நடைபெறுவதில்லை.**(பைருவிக் அமில ஆக்ஸிஜனேற்ற கார்பன் நீக்கம்)**

60. மலர்தலில் ஒளிக்காலத்துவ பதில்விளைவு முதலில் கண்டறியப்பட்டது-------**(மேரிலேண்ட் மாமூத்)**

எம். சண்முகசுந்தரம் எம்.எஸ்ஸி.,எம்..்பில்., எம்.எட்., மு.க.ஆ (தாவரவியல்) 9443510886

மனித நலமேம்பாட்டில் உயிரியல்:

1. தழைஉரத்திற்கு (பசுமை) எடுத்துக்காட்டு ----------**(செஸ்பேனியா)**
2. உயிரி உரமாக இந்திய நெல் வயல்களில் பயன்படுத்தப்படுவது ----------**(அசோல்லா பின்னேட்டா)**
3. நெல்லில் துங்ரோ வைரஸை கடத்துவது ----------**(வெட்டுக்கிளி (இலைப்பூச்சி))**
4. நெல்லில் வெப்பு நோயை உண்டாக்கும் உயரி ----------**(பைரிகுலேரியா ஒரைசா)**
5. நெற்பயிரில் பக்கானே நோயை ஏற்படுத்துவது--------**(ஜிப்ராலிக் அமிலம்)**
6. *மாண்டக்டா செக்ஸ்டா* என்ற பூச்சியின் தாக்குதலுக்கு உள்ளாகும் தாவரம்----------**(புகையிலை)**
7. எண்டிரோடாக்சினை தோற்றுவிப்பது --------**(எஸ்ஸெரிசியா கோலை)**
8. மைக்கோ புரதம் ----------ல் அதிக அளவில் உள்ளது **(ஈஸ்ட்)**
9. போபால் அவல நிகழ்ச்சி நடந்த வருடம் ----------**(1984)**
10. மார்.்பைன் கிடைக்கும் தாவரம் ----------**(பப்பாவர் சாம்னி.்பெரம்)(பாப்பி செடி)**
11. நியூரோஸ்போராவில் உயிர்வேதி ஆராய்ச்சியை செய்தவர் / செய்தவர்கள் ----------**(பீடில் மற்றும் டாட்டம்)**
12. நிலக்கடலையில் 'டிக்கா' நோயை ஏற்படுத்துவது --------**(செர்கொஸ்பொரா பெர்சனேட்டா)**
13. ஹாட்ஜர் எலும்பு இணைவி என்பது ----------ன் வணிக பெயர் **(சிசஸ் குவாட்ராங்குலாரிஸ்)**
14. காப்பிக்கு பதிலாக ----தாவர விதைத்துகளையும் பயன்படுத்தலாம் **(கோலா நிட்டிடா)**
15. எலும்பு இணைவி என்ற வணிக பெயர் கொண்ட தாவரம் ---------**(பிரண்டை)**
16. பிரண்டையின் தாவரவியல் பெயர் -------**(சிசஸ் குவாட்ராங்குலாரிஸ்)**
17. எதிரிகளிடையே பீதியை ஏற்படுத்த அழுகும் இறந்த உடல்களில் சொருகி எடுத்த அம்புகளை பயன்படுத்தியவர்கள் **(சிதியன் வில்லாளிகள்)**
18. ஜப்பானில் அரிசியை நொதிக்க வைத்து தயாரிக்கப்படும் மதுபான வகை ---------**(சாகே)**
19. ----------பாக்டீரியா அம்மோனியாவை நைட்ரேட்டாக ஆக்ஸிஜனேற்றம் செய்கிறது **(ரைசோபியம்)**

20. மனிதன் உண்ணதக்க வைட்டமின் செறிந்த மாத்திரைகள் --------லிருந்து தயாரிக்கப்படுகிறது **(ஸ்பைருலினா)**

21. ஸ்ட்ரெப்டோசைக்கிளின் என்ற உயிர் எதிர் பொருள் கட்டுப்படுத்தும் நோய்---------**(எலுமிச்சை கான்சர்)**

22. எலுமிச்சை கான்சர் ரேயை உண்டாக்கும் உயிரி ----------**(சாந்தோமோனாஸ் சிட்ரி)**

23. அதிகளவில் வெற்றிகரமான உயிரி உரமாக இந்திய நெல் வயல்களில் பயன்படுத்தப்பட்டு வருவது ----------**(*அசோல்லா பின்னேட்டா*)**

24. ஒரு நாட்டின் உயிர் ஆதார வளங்களை இரகசியமாக பல அமைப்புகள் சுரண்டுவது மற்றும் பயன்படுத்துவது ----------**(உயிர்ப்பொருள் கொள்ளை)**

25. ஓப்பியம் பாப்பி செடியிலிருந்து பெறப்படும் அதிவலிமை மிக்க வலிநீக்கி மருந்துப்பொருள் --- **(மார்பைன்)**

26. நம் நாட்டில் காணப்படும் *"பேஜியோலஜ் முங்கோ"* உனும் உளுந்து ரகம் ----நாட்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது **(சீனா)**

27. வில்வம் தாவரத்தின் இருசொற் பெயர்- -------- **(ஏகிள் மார்மிலாஸ்)**

28. கோல்சிசைன் (Colchicine) என்ற வேதிப்பொருளை பயன்படுத்தி தூண்டப்படுவது ----- **(பன்மயம்)**

29. நிலத்தில் உள்ள களைகளை நீக்கிடப் பயன்படுவது------**(2,4D)**

30. லின்ட் என்ற இழைத்துணி தயாரிப்பதற்கு பயன்படுவது ----------**(பருத்தி)**

31. வனஸ்பதி மற்றும் சோப்பு ------லிருந்து தயாரிக்கப்படுகிறது ---------**(தவிட்டு மெழுகு)**

32. உவர்ப்புத்தன்மை எதிர்ப்பு பூச்சி எதிர்ப்புத் தன்மை இவைகளைப் பெற்ற அட்டாமிட்டா-2 அரிசி ----------மூலம் உண்டாகிறது **(தூண்டப்பட்ட திடீர்மாற்றம்)**

பூச்சிகளைக்கொல்லும் நச்சுத் தன்மையுடைய டெல்டா எண்டோடாக்சின் புரதத்தினை உற்பத்தி செய்வது --------**(*பேசில்லஸ் துரிஞ்சியன்ஸிஸ்)***

எம். சண்முகசுந்தரம் எம்.எஸ்ஸி.,எம்..்.பில்., எம்.எட்., மு.க.ஆ (தாவரவியல்) 9443510886

33. மன மற்றும் உடல் அழுத்தத்திலிருந்து விடுபட பயன்படுத்தப்படும் 'ஜின்செங்' எனும் மருந்தை கொடுக்கும் தாவரம் --------**(பனாக்ஸ் சிற்றினம்)**

34. சிபிலிஸ் நோயிக்கு மருந்தாக பயன்படுவது ----------(***பேசில்லஸ் லைக்கனிபார்மிஸ்*** பாக்டீரியத்தின் **பாசிட்ரேசின்** என்ற மருந்து)

35. பைரிகுலேரியா ஒரைசே என்ற பூஞ்சை சார்ந்துள்ள பிரிவு----------**(டியூட்டிரோ மைசீட்ஸ்)**

36. பைரிகுலேரியா ஒரைசே என்ற பூஞ்சை உருவாக்கும் நோய் ----------**(நெல்லின் வெப்பு நோய்)**

37. சைட்டோகைனின் பணி ----------அதிகரிக்கப்படுவதாகும **(செல்பிரிதலை தூண்டுவதை)**

38. *கோலோ நிட்டிடா*வின் தூளாக்கப்பட்ட விதைகள் ----------பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது **(காப்பி)**

39. *ஜலக்ஸ் பராகவென்சிஸ்* இலைகள் -------- பதிலாக பயன்படுத்தப்படுகிறது **(தேனீருக்கு)**

40. *ஸ்ட்ரெப்டோமைஸஸ் வெனிசுலை* பாக்டீரியத்திலிருந்து பெறப்படும் உயிர் எதிர் பொருள் ------ **(குளோரோமைசிடின்)**

59. ஏகிள் மார்பிலாஸ்----------குடும்பத்தைச் சார்ந்தது **(ரூட்டேஸி)**

60. குளோரோமைசிடின் குணப்படுத்தும் நோய் ----------**(எலும்புருக்கி நோய்)**

61. பாசிட்ரேசின் எனும் உயிர் எதிர்ப்பொருள் --------நோயினை குணப்படுத்த உதவுகிறது **(சி.ீ.பிலிஸ்)**

62. செயற்கை முறையில் நெல் வயல்களில் உயிரி உரங்களை வளரச்செய்ய உதவும் சயனோ பாக்டீரியம் ----------**(நாஸ்டாக்)**

63. *செர்கோஸ்கோரா பெர்சனேட்டா* என்ற பூஞ்சை உருவாக்கும் நோய் -----**(நிலக்கடலையில் டிக்கா நோய்)**

தயாரித்தவர்:

எம். சண்முகசுந்தரம் எம்.எஸ்ஸி.,எம்..ீ.பில்., எம்.எட்., மு.க.ஆ (தாவரவியல்) 9443510886

அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, போச்சம்பள்ளி-635206, கிருஷ்ணகிரி மாவட்டம்.